**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**முன்னிலை : திரு.K.R.கண்ணன், பி.ஏ., பி.எல்.,**
**(J.O.CODE : TN01220),**
**கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர்.**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் வியாழக்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 12 ம் நாள்**

**O.S. No. 305/2011**

**(மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்)**

**(O.S. No.102/2011)**

**CNR No. TNTI040008652011**

1.திருமதி. ராமாத்தாள் .... வாதி

//எதிர்//

1.திருமதி. லட்சுமி

2.திரு. சுப்பையன் (இறப்பு)

3.திரு. பொன்னுசாமி

4.திரு. பி.கணபதியப்பன்(இறப்பு)

5. திரு. ராமசாமி

6.திருமதி. சாவித்திரி

7.திரு. எஸ்.நடராஜன்

8.திரு.எஸ். சண்முகசுந்தரம்

9. திரு. எஸ். மகேஸ்வரன்

10. திரு. எஸ்.விவேகானந்தன்

11. திரு. எஸ்.சௌவுந்தர்ராஜன்(இறப்பு)

(இ.ம.எண்.5/2023 30.10.2023 ம் தேதி ஏற்பட்ட உத்தரவின் படி திருத்தம் செய்யப்பட்டது)

12.திரு.எஸ்.துரைசாமி

13.திரு.ஜி. காளிமுத்து

14.திரு. ஜி. பாலசுப்பிரமணியம்

15. திருமதி. லட்சுமி

16.திருமதி. ரத்தினா

17.திருமதி.சகுந்தலா

18. திருமதி. வளர்மதி

19.திரு. கமல்ராஜ்

20.திருமதி. கவிதா

21. திருமதி. வளர்மதி

22.திருமதி.செண்பகம்

23.திரு.நிதின்

24.திரு.பொன்சபரி(இ.ம.எண்.5/2023 30.10.2023 ம் தேதி ஏற்பட்ட உத்தரவின் படி திருத்தம் செய்யப்பட்டது)

.... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது நீதிமன்றத்தில் என் முன்பாக 09.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர். ரகுபதி, பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 5 மற்றும் 6 ம் பிரதிவாதி தரப்பில் திரு. டி. புவனேஸ்வரன்., பி.ஏ.,பி.எல்., 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.லட்சுமணன், பி.ஏ., பி.எல்., அவர்களும், 13 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் திரு.பி.சுரேஷ், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 22, 23 24 பிரதிவாதிகள் தரப்பில் திரு.எஸ்.அன்புராஜ்., அவர்கள் ஆஜராகியும், கற்றறிந்த வாதி, பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வாதங்கள், ஆவணங்கள், சாட்சியங்கள் ஆகியவற்றை பரிசீலித்து இவ்வழக்கில் இன்று நீதிமன்றம் வழங்கும்.

**// தீர்ப்புரை //**

திருத்தப்பட்ட வழக்குரையின் படி தாவாச் சொத்துக்களை மூன்று சமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி தனிசுவாதீனம் கொடுக்ககோரியும் இதர பரிகாரங்கள் செலவுத் தொகை கேட்டு, வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>08.11.2023 ம் தேதிய திருத்தப்பட்ட வழக்குரையின் படி வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :–</u>**

2.1) முதல் பிரதிவாதி வாதியின் சகோதரி. 2 ம் பிரதிவாதி முதல் பிரதிவாதியின் கணவர். 3 ம் பிரதிவாதி வாதியின் மகன். தாவாச் சொத்து 2.06.1910 ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணத்தின் படி சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட பரம்பரை சொத்தாகும். அதன்அடிப்படையில் அவர் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வந்தார்.

2.2) வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் 15.10.1965 ம்தேதி அவருடைய மகள்களான வாதி, முதல் பிரதிவாதி மற்றும் பழனிசாமியை வாரிசுளாக விட்டு இறந்துபோனார். பழனிசாமி 20.03.1971 ம் தேதி திருமணம் ஏற்படாமல் இறந்துபோனார். ஆகையால், சுப்பைய கவுண்டருக்கு வாதியும், முதல் பிரதிவாதியும் தான் சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்று திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.65/2007 ல் 30.10.2009 ம் தேதி உத்தரவிட்டுள்ளது. சுப்பைய கவுண்டர் இறந்தபிறகு தாவாச் சொத்தை வாதியும், முதல் பிரதிவாதியும் கூட்டு சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்துவந்தார்கள். வருவாய் ஆவணங்களான பட்டா, சிட்டா, அடங்கல் வாதி மற்றும் முதல் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டுள்ளது. வாதியும், முதல் பிரதிவாதியும் அதற்குரிய கந்தாயத்தை அரசுக்கு செலுத்தி தாவாச் சொத்தில் சுவாதீனத்தில் இருந்து அனுபவம் செய்து வருகிறார்கள். தாவாச் சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது.

2.3) 07.09.1960 ம் தேதி நான்காம் பிரதிவாதியின் தகப்பனார் பழனிகவுண்டர் இடுவாய் கிராமம், க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்துக்களை சுப்பைய கவுண்டரிடம் யிருந்து வாதி மற்றும் முதல் பிரதிவாதிகள் அனுமதி மற்றும் கையொப்பம் பெறாமல் கிரையம் பெற்றுள்ளார். அந்த, கிரைய ஆவணம் வாதி மற்றும் முதல் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது மேலும் நடைமுறைக்கு வரவில்லை. அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பழனிகவுண்டரின் ஒரே மகனான நான்காம் பிரதிவாதி பழனிகவுண்டர் இறந்தபிறகு க.ச.எண். 115 ல் 1.8 ஏக்கர் சொத்தில் பொய்யாக உரிமை கோரி வருகிறார். நான்காம் பிரதிவாதிக்கு சொத்துக்களில் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 1/3 பாக உரிமைமட்டும் உள்ளது. நான்காம் பிரதிவாதிக்கு மீதம் உள்ள வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு உரிய 2/3 பாகத்தை பொறுத்து எந்த உரிமையும் பாத்தியமும் ஏற்படாது.

2.4) அதே போல் 07.09.1960 ம் தேதி 6 ம் பிரதிவாதியின் தகப்பனார் முருகசாமி இடுவாய் கிராமம் க.ச.எண். 115 ல் 3.10 1/4 ஏக்கர் மற்றும் 0.15 செண்டில் பொது பாதை 0.60 செண்டில் வரை உள்ள சொத்துக்களை சுப்பைய கவுண்டரிடம் இருந்து வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் சம்மதமின்றி கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் வாதியும் மற்றும் முதல் பிரதிவாதிக்கு சொத்துக்களின் உள்ள உரிமையை பொறுத்து கட்டுப்படுத்தாது. அந்த கிரைய ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை. மேலே சொன்ன கிரைய ஆவணத்தின் அடிப்படையில் முருகசாமி பொய்யாக 29.07.2002 ம்தேதி அவருடைய மருமகனான 5 ம் பிரதிவாதி மற்றும் அவருடைய மகளான 6 ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரைய ஆவண எண். 3220/2002, 3221/2002 ஆகியவை செல்லாது வாதிக்கு தாவாச் சொத்தில் உள்ள உரிமையை பொறுத்து கட்டுப்படுத்தாது.

2.5) அதே போல், 18.09.1989 ம் தேதி 7 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனார் எஸ். சுப்பிரமணியம் பல்லடம் தாலுக்கா, பூமலூர் கிராமத்தில் க.ச.எண்.89/2 ல் 7.20

ஏக்கர் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணங்களின் படி தாவாச் சொத்துக்களில் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு உள்ள உரிமையை பொறுத்து கட்டுப்படுத்தாது. அந்த கிரைய ஆவணங்கள் நடைமுறைக்கு வரவில்லை. 7 முதல் 12 பிரதிவாதிகள் அந்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில் சுப்பிரமணியம் இறந்தபிறகு அவருடைய வாரிசுதாரர்கள் என்ற அடிப்படையில் பொய்யாக உரிமைகோருகிறார்கள். 7 முதல் 12 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் 1/3 உரிமை மட்டும் உள்ளது. வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு தாவா சொத்pj; 2/3 பாகத்தை பொறுத்து உரிமை ஏற்படாது. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தாவாச் சொத்துக்களை பொறுத்து ஆவணங்களை ஏற்படுத்த முயற்சி செய்து உரிமை கோரியதால் அவர்களும் தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2.6) தாவாச் சொத்துக்களில் இன்னும் பாகப்பிரிவினை ஏற்படாமல் உள்ளது. தாவாச் சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது. பலமுறை தாவாச் சொத்தை வாய்மொழியாக பாகம் பிரித்து வாதி கோரிய பாகத்தை தனிசுவாதீனத்தை பிரதிவாதிகளிடம் வாதி மத்தியஸ்தர் மூலம் கேட்ட போது பிரதிவாதிகள் வாதி கோரிய பாகத்தை பிரித்து கொடுக்கவில்லை. வாதிக்கு தெரியாமல் தாவாச் சொத்தில் சில பாகங்களை 2 முதல் 12 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள். அவ்வாறு அவர்கள் பெற்ற கிரையம் தாவாச் சொத்தில் வாதி கோரிய பாகத்தை கட்டுப்படுத்தாது.

2.7) தாவா நிலுவையில் இருந்தபோது பி. கணபதியப்பன் 22.03.2013 ம் தேதி அவருடைய மனைவி காளிமுத்து, மகன் பாலசுப்பிரமணியம், மகள்கள் லட்சுமி, ரத்தினா, சகுந்தலா 13 முதல் 17 பிரதிவாதிகளை வாரிசுளாக விட்டு இறந்துபோய் உள்ளார். 13 முதல் 17 பிரதிவாதிகள் நீதிமன்ற உத்தரவின் படி இ.ம.எண். 792/2017 ல் ஏற்பட்ட உத்தரவு படி தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2.8) தாவா நிலுவையில் இருந்தபோது 2ம் பிரதிவாதி சுப்பையன் 29.07.2015 ம் தேதி முதல் பிரதிவாதி லட்சுமி மற்றும் அவருடைய மகள் 21 ம் பிரதிவாதி வளர்மதி மற்றும் இறந்துபோன அவருடைய மகன் மாணிக்கராஜ் ஆகியோர் வாரிசுதாரரான வளர்மதி, கமல்ராஜ், கவிதா ஆகியோர் 18 முதல் 20 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு இறந்துபோய் உள்ளார். அவர்களை 01.09.2021 ம் தேதி இ.ம. எண். 225/2021 ல் ஏற்பட்ட உத்தரவின் படி 18 முதல் 20 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2.9) தாவா நிலுவையில் இருந்தபோது 11ம் பிரதிவாதி சௌந்தரராஜன் 03.03.2019 ம்தேதி அவருடைய மனைவி செண்பகம், நிதின், பொன்சபரி ஆகியோரை வாரிசுளாக விட்டு இறந்துபோனதால் இ.ம.எண். 4/2023 ன் படி 22 முதல் 24 பிரதிவாதிகளாக தாவாவில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

2.10) ஆகையால் தாவாச் சொத்தில் பிரதிவாதிகள் தாவாச் சொத்தை மூன்று சமபாகமாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு பிரித்து தரகோரி தாவாவில் பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

**3) 5ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 6ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்.**

3.1) 5ம் பிரதிவாதிகள் பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

3.2) தாவா வழக்குரை பத்தி3 ல் வாதுரைக்கப்பட்டுள்ள பாதி சங்கதிகள் உண்மை மற்றவை பொய். எதிர்வழக்குரை பத்தி 3 முதல் 5 ன் வாயிலாக தாவா வழக்கு பொருண்மைகள் மறுக்கப்பட்டுள்ளது.

3.3) 6ம் பிரதிவாதியின் தகப்பனார் முருகசாமி 07.09.1960 ம் தேதி தாவாச் சொத்துக்களின் சில பகுதிகளை கிரைய ஆவண எண். 2141/1960ன் படி கிரையம் பெற்றுள்ளார். அதன் அடிப்படையில் க.ச.எண். 114 ல் 0.50 ஏக்கர் க.ச.எண். 115ல் 3.10 1/4 ஏக்கர் மற்றும் பொதுவாக 0.60 ஏக்கர் ஆக மொத்தம் 3.75 1/4 ஏக்கர் நிலம் முருகசாமிக்கு பாத்தியப்பட்டது. முருகசாமி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் நடைமுறைக்கு வந்து எந்த ஒரு இடையூறும் இன்றி அவர் அனுபவம் செய்து வந்தார்.

3.4) 6ம் பிரதிவாதி தகப்பனாரின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் நடைமுறைக்கு வந்து அவர்தனிப்பட்ட சுவாதீனம் அடைந்து தாவாச் சொத்தின் ஒரு பகுதியை உயிருடன் இருக்கும் வரை அனுபவம் செய்து வந்தார். முருகசாமி உயிருடன் இருக்கும்போது 29.07.2002 ம் தேதி கிரைய ஆவண எண். 3221/2002 ன் படி க.ச.எண். 115/2 ல் 1.69 ஏக்கர் மற்றும் கிரைய ஆவண எண். 3220/2002 ன் படி 6ம் பிரதிவாதி பெயரில் க.ச.எண். 115/2 ல் 1.09 ஏக்கர் மற்றும் க.ச.எண். 114/1 ல் 0.59 ஏக்கர் மற்றும் பொது சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்து கிரைய ஆவணம் நடைமுறைக்கு வந்து கிரையதாரர்கள் சுவாதீனம் அடைந்து அனுபவம் செய்து வந்தன் அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

3.5) வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோதே பாகப்பிரிவினையின் மூலம் பெற்ற சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார். ஆகையால் வாதியும் முதல் பிரதிவாதியும் க.ச.எண். 114/1 மற்றும் 115/2 ல் எந்த ஒரு உரிமையும் சுவாதீனமும் இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக உரிமைகோருகிறார்கள்.

கடந்த 1910 முதல் 2010 ம் ஆண்டு வரை தாவா சொத்திற்குரிய அசல் உரிமை ஆவணங்கள் எதுவும் இல்லாமல் முதல் பிரதிவாதி அவருடைய கணவரான 2ம் பிரதிவாதி பெயரிலும் 3ம் பிரதிவாதி அவர் மகன் பெயரிலும் 19.05.2010 ம் தேதி மோசடியான செட்டில்மெண்ட் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளார்.

3.6) எந்த ஒரு நடைமுறைகளும் பின்பற்றாமல் திருப்பூர், இணை சார்பதிவாளர் 1 அவர்கள், வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் தாவாச் சொத்தில் உரிமையோ, பாத்தியமோ இல்லை என்று தெரிந்தபிறகும் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் செட்டில்மெண்ட் ஆவணங்களை பதிவு செய்துள்ளார். அதன் அடிப்படையில் வருவாய் துறை அதிகாரிகலும் தவறாக வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். இதை பொறுத்து தகுதிவாய்ந்த குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது.

3.7) தாவாச் சொத்தில் வாதியும், முதல் பிரதிவாதியும் என்றுமே சுவாதீனத்தில் இல்லை. ஆகையால் வாதி தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37(2) ன் படி மதிப்பீடு செய்து செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமே தவறு. நீதிமன்ற கட்டணம் பிரிவு 37(1) ன் படி செலுத்தப்படவேண்டும். இதன் அடிப்படையிலேயே தாவா தள்ளபடி செய்யப்படவேண்டும். வாதி தாவாவில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் காலவரை தோஷத்தால் பாதிப்படைவதால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

**4) 9ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 7,8, 10 முதல் 12 பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை சுருக்கம்.**

4.1) 9ம் பிரதிவாதிகள் பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள்

ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

4.2) எதிர்வழக்குரை பத்தி 3 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். தாவா பரிகாரங்கள் காலவரையால் பாதிப்படைகிறது. எந்த ஒரு கால வரை சட்ட பிரிவும் வாதி கோரியுள்ள பரிகாரங்கள் காப்பாற்றமுடியாது என்பதால் தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4.3) வாதியும், முதல் பிரதிவாதியும் இந்து பெண் மக்கள் என்பதால் மூததையர் சொத்துக்களில் இணை பாகதாரர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு ஏற்கனவே தாவா சொத்துக்களில் எந்த ஒரு உரிமையும் ஏற்படாது. வாதியும் முதல் பிரதிவாதியும் 07.09.1960 ம் வருடத்திற்கு முன்பு சொத்துக்கள் விற்பனை செய்வதற்கு முன்பு பிறக்காததால் தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்டுயிருக்கும் 10 மற்றும் 11 ஆவணங்களை பொறுத்து 3ம் தரப்பினர். ஆதனால் தான் அவர்கள் அந்த ஆவணங்களை பற்றி வாதுரைக்க தவறியுள்ளார்கள்.

4.4) தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்பது மறுக்கப்படுகிறது. எதன் அடிப்படையில் வாதி அவ்வாறு பாகத்தை கணக்கிட்டு முடிவு செய்துள்ளார் என்பது தெரியவில்லை. தாவா சொத்தில் வாதிக்கு உரிமை இருப்பதாக எடுத்துக்கொண்டால் கூட தாவாவில் கோரியவாறு வாதிக்கு பாகம் ஏற்படாது. தாவா சொத்து விவரத்தில் கட்டடங்கள் உள்ளதாக வாதுரைத்த பிறகு அதற்குரிய நீதிமன்ற கட்டணம் செலுத்த வாதி தவறியுள்ளார். தாவா சொத்து மொத்த மதிப்பு 2 கோடி அதில் 1/3 பாகம் ரூ. 70 லட்சம் என்பதால் இந்த தாவாவை விசாரணை செய்ய இந்த நீதிமன்றத்திற்கு பணவரவு அதிகாரமே இல்லை. அதன் அடிப்படையில் தாவா திருப்பட்டு சரியான நீதிமன்றத்தில் அனுப்பும்படி உத்தரவிடவேண்டும்.

4.5) தாவா சொத்தில் வாதிக்கு எந்த பாக உரிமையும் இல்லை. 07.06.1960 ம் வருட கிரைய ஆவணத்தை செல்லாது என்று பரிகாரம் கோர வாதி தவறியுள்ளார். வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் ஏற்படுத்திய கிரையங்கள் செல்லாது என்று வாதி பரிகாரம் கோரமுடியாது. தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை 7 முதல் 12 பிரதிவாதிகள் முறையாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதால் அவற்றை இடஞ்சல் செய்ய வாதிக்கு உரிமை இல்லை. 7 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனார் சுப்பிரமணியம் வாதியின் தகப்பனாரிடம் இருந்து நேரடியாக சொத்துக்களை கிரையம் பெற வில்லை. தாவா சொத்துக்களை 7 முதல் 12 பிரதிவாதிகள் தாவாவுடன் தாக்கல் செய்யப்பட்டுயிருக்கும் ஆவண எண். 10 முதல் 14 ன் படி கிரையம் பெற்றுள்ளதால் அவர்களை தாவாவில் தரப்பினர்களாக சேர்க்க தவறியுள்ளதால் தாவா அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைகிறது.

4.6) வாதியும், முதல் பிரதிவாதி மட்டும் தான் இறந்துபோன சுப்பைய கவுண்டரின் வாரிசுதாரர்கள் என்று திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண். 65/2007 ல் ஏற்பட்டுள்ள தீர்ப்புரை வாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து எந்த வகையிலும் உதவாது. வாதியும் முதல் பிரதிவாதியும் இறந்துபோன சுப்பைய கவுண்டருக்கு 07.09.1960 ம் தேதிக்கு முன்பு பிறந்துள்ளார்கள் என்பதை நிரூபனம் செய்யவேண்டும். அதை நிரூபணம் செய்ய தவறினால் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் தாவா சொத்தில் எந்த உரிமையும் பாகமும் ஏற்படாது.

4.7) தாவாவில் 1 முதல் 6 பிரதிவாதிகள் முதல் வாய்தா அன்றே வழக்கறிஞரை நியமனம் செய்துள்ளார். 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாக சேர்ந்து வந்து தாவா சொத்துக்களில் வாதிக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் பாகம் உள்ளதாக

கெட்ட எண்ணத்துடன் தெரிவித்துவருகிறார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவாவில் வாதி கோரியுள்ள படி பரிகாரம் வழங்க ஆட்சேபனை இல்லை என்று கூட சொல்லாம். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை பொறுத்து ஆவணங்களை ஏற்படுத்த முயற்சிப்பதாக சொல்வது பொய். 7 முதல் 12 பிரதிவாதிகளிடம் வாதி எப்போதும் தாவா சொத்துக்களை பாகம் பிரித்து தரும்படி கேட்கவில்லை. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு பாகப்பிரிவினை கேட்டு எந்த ஒரு சட்ட அறிவிப்பும் வாதி அனுப்பவில்லை. தாவா யூகத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4.8) 7 முதல் 12 பிரதிவாதிகளுடன் வாதி தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் உள்ளதாக சொல்வது தவறு. எந்த காலத்திலும் வாதி தாவா சொத்தில் 7 முதல் 12 பிரதிவாதிகளுடன் கூட்டு சுவாதீனத்தில் இல்லை. 7 முதல் 12 பிரதிவாதிகள் தாவா சொத்தில் தனிப்பட்ட சுவாதீன அனுபவத்தில் யிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இல்லை என்பதால் அதன் அடிப்படையில் பாகப்பிரிவினை நீதிமன்ற கட்டணத்தை வாதி செலுத்தவேண்டும். தாவாவிற்கு வழக்கு மூலமே இல்லை. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

5. 14ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 13,15 முதல் 17 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்.

5.1) இந்த பிரதிவாதி பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள்

ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

5.2) தாவா பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்பு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருப்பூரில் தாவா சொத்தை பொறுத்து விளம்புகை, நிரந்தர ஊறுத்துக்கட்டளை மற்றும் செயல் ஊறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அ.வ.எண். 102/2017 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கில் வழக்குரை, எதிர்வழக்குரையின் ஒரு பாகமாக கருதவேண்டும். இந்த சங்கதிகளை மறைத்து வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5.3) தாவா வழக்குரை பத்தி 3 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் பகுதியனவை உண்மை மற்றவை பொய். தாவா வழக்குரை பத்தி 4 முதல் 7 ல் வாதுரைக்கப்பட்டுள்ள பொருண்மைகள் எதிர்வழக்குரை பத்தி 4 முதல் 9 ல் மறுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்து க.ச.எண். 115/9, 115/10 1.80 ஏக்கல் சொத்தில் ஒரு பகுதி 14 ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தாகும். 14 பிரதிவாதியின் பட்டானார் பழனிகவுண்டர் அந்த சொத்தை வாதியின் தகப்பனாரிடம் இருந்து 07.09.1960 ம் தேதி கிரையமாக பெற்றுள்ளார். அந்த கிரைய ஆவணம் நடைமுறைக்கு வந்து 14 ம் பிரதிவாதியின் தகப்பனார் சொத்துக்களில் சரியான உரிமையாளராகயிருந்து கிரையம் பெற்று உயிருடன் இருந்தவரை சுவாதீனம் அடைந்து அனுபவம் செய்துவந்தார். அவருடைய இறப்பிற்கு பிறகு 14 ம் பிரதிவாதி தனிப்பட்ட உரிமையாளராக சொத்துக்களை அடைந்து அனுவம் செய்துவருகிறார். வருவாய் ஆவணங்கள் 14 ம் பிரதிவாதி பெயரிலும், அவருடைய முன்னோர்கள் பெயரில் 1960 முதல் கடந்த 50 ஆண்டுகளாக அவர்களுடைய சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது.

5.4) 22.05.1995 ம் வருடம் நில அளவை எல்லை சட்டம் மற்றும் பட்டா பாஸ்புத்தகம் 1986 ன் சட்டத்தின் படி சொத்துக்கள் அளவீடு செய்யப்பட்டு சிறப்பு வட்டாச்சியர் பட்டா எண். 65 ஐ வழங்கியுள்ளார். 4 ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்தில் ஒரு பகுதியை பொறுத்து கணினி பட்டா 65 மற்றும் 537 ஏற்பட்டுள்ளது. 1986 முதல் 2010 ம் வருடம் வரை 5.10.2010 ம் தேதிய அடங்கல் கணக்குகள் இந்த பிரதிவாதி பெயரில் உள்ளது.

5.5) அவ்வாறு கிரையம் பெற்ற சொத்தக்கள் க.ச.எண். 115/9 ல் அமைந்துள்ளது. அந்த சொத்திற்குரிய பாதை க.ச.எண். 110 ல் அமைந்துள்ளது. நில அளவை எல்லை சட்டம் மற்றும் பட்டா பாஸ்புத்தகம் 1986 ன் சட்டத்தின் படி 4 ம் பிரதிவாதி பெயரில் 1985 ம் வருடம் பட்டா எண். 537 வழங்கப்பட்டுள்ளது. 1960 ம் ஆண்டிலிருந்து 4 ம் பிரதிவாதி மேலே சொன்ன சொத்துக்களை உரிமை ஆவணங்கள் அடிப்படையிலும் வருவாய் ஆவணங்கள் பெற்று அனுபவம் செய்துவருகிறார். வாதியும், முதல் பிரதிவாதியும் இறந்துபோன சுப்பையகவுண்டரின் பெண் மக்கள். 02.06.1910 ம் வருடம் பாகப்பிரிவினை ஆவணத்தின் படி அவர்கள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளார்கள். ஆனால் வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தகப்பனார் பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பெற்ற சொத்துக்களை அவர் உயிருடன் இருந்தபோது விற்பனை செய்துவிட்டார்.

5.6) 14 ம் பிரதிவாதியின் பாட்டனார் சுப்பையகவுண்டரிடம் இருந்து 1960 ம் வருடம் தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளார். அவ்வாறு கிரையம் பெற்ற சொத்துக்களை எந்த ஒரு உரிமை மற்றும் சுவாதீனம் இல்லாமல் பொய்யான கிரைய ஆவணங்களை கொண்டு சரியான உரிமை ஆவணங்கள் இல்லாமல் பாகம் கோரிவருகிறார்கள். ஏற்கனவே விற்பனை

செய்யப்பட்ட சொத்தை வாதியும் முதல் பிரதிவாதியும் எந்த உரிமையும் பாத்தியமும் இல்லாமல் தானசெட்டில் மெண்ட் ஆவணம் 4310/2010, 4311/2010 தயார் செய்து மோசடியாக பதிவு செய்துள்ளார்கள். சார்பதிவாளரும் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் பதிவு சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் வில்லங்கம் பரிசீலனை செய்யாமல் தவறாக செட்டில் மெண்ட் ஆவணங்களை பதிவு செய்துள்ளார். அவ்வாறு தவறாக ஏற்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் பட்டா பாஸ் புக் சட்ட விதிகளை பின்பற்றாமல் வட்டாச்சியர் கூட்டு சதி செய்து பட்டாவில் வாதி மற்றும் முதல் பிரதிவாதி பெயரை வருவாய் ஆவணங்களில் சேர்த்துள்ளார். தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லாமல் அரசு அதிகாரிகள் துணையுடன் ஆதாயம் அடைய வேண்டி ஆவணங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

5.7) எந்த உரிமையும் பாத்தியம் இல்லாமல் 01.02.2011 ம் தேதி வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் தாவா சொத்தில் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்ததை 4ம் பிரதிவாதி தடுத்துவிட்டார். 4ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவண சொத்தை பொறுத்து நான்கு பக்க செக்கு பந்திகள் சரியாக கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தானசெட்டில் மெண்ட் ஆவணத்தில் சரியான சொத்துவிவரம் இல்லை என்பதன் மூலம் வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் தாவா சொத்தில் எந்த ஒரு சுவாதீன அனுபவத்திலும் இல்லை என்று தான் தெரியவருகிறது. 1960 ம் வருட ஆவணத்தின் செக்கு பந்தி விவரம் சரியாக கொடுக்கப்பட்டுள்ள போது வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் சட்டத்திற்கு புறம்பான ஆவணங்கள் ஏற்படுத்தியதால் தான் அதில் செக்கு பந்திகள் சரியாக கொடுக்கவில்லை. அந்த ஆவணங்களின் அடிப்படையில் சொத்துக்கள் பூமியில் இல்லை. 4ம் பிரதிவாதி செட்டில் மெண்ட்

ஆவணங்கள் செல்லாது என்பதை பொறுத்து வேறு ஒரு வழக்கை தாக்கல் செய்து நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரத்தை கோரியுள்ளார்.

5.8) தாவா நிலுவையில் இருந்தபோது 22.03.2013 ம் தேதி 4ம் பிரதிவாதி இறந்துபோன பிறகு அவருடைய வாரிசுதாரர்கள் 13 முதல் 17 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே 4ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோது 14ம் பிரதிவாதி பெயரில் உள்ள அன்பு, பாசத்தின் அடிப்படையில் சொத்துக்களை அவர் பெயரில் விருப்புறுதி ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார். தாவாவிற்கு வழக்குமூலமே இல்லை. தாவாவில் வாதுரைத்துள்ள வழக்குமூலம் தவறு. தாவா பரிகாரங்களுக்காக சொத்துக்கள் சரியாக மதிப்பீடு செய்து சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்த தவறியுள்ளதாலும், தாவா காலவரை தோஷத்தால் பாதிப்படைவதால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

<u>6. 21ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 18 முதல் 20 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்.</u>

6.1) இந்த பிரதிவாதி பணிந்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மேற்படி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானவை, மேலும் சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

6.2) 20 ம் பிரதிவாதி தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள உறவு முறைகள் மற்றும் சுப்பைய கவுண்டர் வாரிசுதாரர்களாக விளம்புகை செய்யப்பட்ட வழக்கு விவரங்கள் தாவா சொத்தில் வாதியும் முதல் பிரதிவாதியும் கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளது மற்றும் வாதிக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் மற்றும் 2ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார்.

6.3) வாதி, தாவா திருத்தப்பட்ட வழக்குரையில் வாதுரைத்துள்ள பொருண்மைகள் மற்றும் வாதி முதல் பிரதிவாதி ஏற்படுத்திய **தானசெட்டில் மெண்ட் ஆவணங்களை 20 ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டு அ.வ.எண். 411/2019 தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தாவா சொத்தில் முதல் பிரதிவாதிக்கு 1/3 பாகம் பாத்தியப்பட்டது என்று தீர்ப்பாக வேண்டும் என்று வாதுரைத்துள்ளார்.**

**7. 22ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 23 மற்றும் 24 ம் பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்.**

7.1) வாதி தாக்கல் செய்துள்ள தாவா சட்டப்படி செல்லாது பொய். தாவாவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல மறுக்கப்படுகிறது.

7.2) இந்த பிரதிவாதிகள் பூமலூர் கிராமம் க.ச.எண். 89/2 சொத்துக்களை பொறுத்து மட்டும் சம்பந்தபட்டவர்கள் தாவா வழக்குரையில் வாதுரைத்துள்ள உறவு முறை அதன் அடிப்படையில் ஏற்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வாதியே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். 02.06.1910 ம் தேதி பாகப்பிரிவினை ஆவணத்தின் படி பூமலூர்கிராமம் க.ச.எண். 89/2 சொத்துக்கள் சுப்பையகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மை. அந்த சொத்துக்களில் சுப்பையகவுண்டருடன் வாதியும், முதல் பிரதிவாதியும் கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக சொல்வது பொய். தாவா சொத்தில் வாதிக்கு 1/3 பாகம் உள்ளது என்பது மறுக்கப்படுகிறது. தாவா வழக்குரை பத்தி 7 முதல் 9 ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. தாவா வழக்குரை பத்தி 9 (சி) ல் சொல்லப்பட்டுளள சங்கதிகள் இந்த பிரதிவாதி ஒப்புக்கொள்கிறார்.

7.3) பூமலூர் கிராமம், க.ச.எண். 89/2 சொத்துக்கள் 02.06.1910 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தின் படி சுப்பையகவுண்டருக்கு பாத்தியப்பட்டது.

சுப்பையகவுண்டர் க.ச.எண். 89/2 ல் பாகம் மூலம் பெற்ற சொத்துக்களை அவருடைய இளவர் மகன் பழனிசாமிக்கும் சேர்த்து 15.06.1960 ம் தேதிய கிரைய ஆவணத்தின் படி பழனிகவுண்டருக்கு விற்பனை செய்துவிட்டார். பழனிகவுண்டர் சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து சுவாதீனத்தில் இருந்து இறந்துபோன பிறகு அவருடைய ஒரே மகளான கருணையம்மாள் சொத்துக்களை அடைந்து அனுபவம் செய்து வந்தார். அதன் பிறகு கருணையம்மாள் அவருடைய மகன்கள் ராமசாமி, சுப்பிரமணியம், துரைசாமி மகள்கள் வள்ளியம்மாள், கோவிந்தம்மாள் ஆகியோர் சேர்ந்து க.ச.எண். 89/2 சொத்துக்கள் ஒரு குமரன் & கோ நிறுவனத்திற்கு 04.02.1980 ம் தேதியில் இரண்டு கிரைய ஆவணங்கள் மூலம் விற்பனை செய்து அவர்களிடம் சுவாதீனத்தை ஒப்படைத்தனர். குமரன் & கோ நிறுவனத்தின் பங்குதாரான ஆர்.பெரியசாமி. மற்றும் கே. ராமசாமி இரண்டு விடுதலை ஆவணங்கள் மூலம் குமரன் & கோ நிறுவனம் கிரையம் பெற்ற சொத்துக்களில் 07.08.1983 மற்றும் 28.08.1984 ம் தேதிகளில் விடுதலை செய்து பழனிசாமியிடம் சுவாதீனத்தை ஒப்படைத்தனர். அதன்பிறகு பழனிசாமி அந்த சொத்துக்களில் தனிப்பட்ட உரிமையாளராக அனுபவம் செய்து வந்து 18.09.1980 ம் தேதி ஒரு சுப்பிரமணியம் என்பவருக்கு கிரையம் செய்து சுவாதீனம் கொடுத்துள்ளார்.

7.4) அவ்வாறு சொத்துக்களை கிரையம் பெற்ற சுப்பிரமணியம் எந்த ஒரு ஆவணமும் ஏற்படுத்தாமல் 7 முதல் 12 பிரதிவாதிகளை வாரிசுளாக விட்டு இறந்துபோனதால் 7 முதல் 12 பிரதிவாதிகள் க.ச.எண். 89/2, பூமலூர் கிராம சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள். அதன் அடிப்படையில் அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டுள்ளது. தாவா நிலுவையில் இருந்தபோது 11ம் பிரதிவாதி இறந்துபோனதால் அவருடைய சட்டப்பூர்வமான வாரிசுகள் 22 முதல் 24 பிரதிவாதிகள் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். க.ச.எண். 89/2, பூமலூர் தாவா சொத்துக்களை 7 முதுல்

10, 12 பிரதிவாதிகளுடன் 22 முதல் 24 பிரதிவாதிகள் கூட்டு சுவாதீன அனுபவத்திலிருந்து அனுபவம் செய்துவருகிறார்கள்.

7.5) வழக்குரை பத்தி 6 முதல் 9 ல் குறிப்பிட்டுள்ள நபர்களை தாவாவில் வாதி தரப்பினர்களாக சேர்க்கதவறியதால் தாவா அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைகிறது. க.ச.எண். 89/2 பூமலூர் கிராம சொத்துக்களை பொறுத்து 15.09.1960 மற்றும் 04.02.1980, 07.03.1983, 28.08.1984, 08.09.1989 தேதிகளில் ஏற்பட்ட ஆவணங்களை பொறுத்து வாதி பரிகாரம் கோர தவறியதாலும் தாவா பரிகாரங்கள் காலவரை தோஷத்தால் பாதிப்படைந்ததால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும். 50 வருடங்களுக்கு மேல் வாதி தூங்கி விட்டு சொத்துகளில் ஏதோ உரிமை இருப்பதாக தற்போது வழக்குமூலமே இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். வாதி பாகப்பிரிவினைக்காக தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37 (2) ன் படி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு. ஆகையால் தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

**8**) வாதி தாக்கல் செய்துள்ள தாவா வழக்குரை, ஆவணங்கள், பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை, இருதரப்பு வாதுரைகள், ஆகியவற்றை பரிசீலனை செய்து 15.02.2021 கீழ்க்கண்ட எழுவினாக்கள் வணைப்பட்டது.

**<u>9) எழுவினாக்கள் :–</u>**

1. தாவா சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்களா?
2. தாவா சொத்தில் வாதி கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளாரா ?
3. தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் பெற உரிமை உள்ளதா?
4. தாவா காலவரை தோஷத்தால் பாதிப்படைகிறதா?

5. வாதி தாவாவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியா ?

6. வாதி தாவாவில் விளம்புகை பரிகாரம் கோரம்மால் கோரியுள்ள பாகப்பிரிவினை நிலைக்கத்தக்க?

7. தாவா அவசிய தரப்பினர்களை சேர்க்கதா தோஷத்தால் பாதிப்படைகிறதா?

8. வாதிக்கு வேறு எண்ண பரிகாரங்கள் வழங்க வேண்டும்?

10) வாதி தரப்பில், வாதி ராமாத்தாள் க/பெ. சின்னமுருகசாமி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், ஒரு வேலுசாமி த/பெ.முருகசாமி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் வாதி தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஐந்தாம் பிரதிவாதி ராமசாமி த/பெ. சுப்புகுட்டி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு **பி.வா.சா.ஆ– 1** முதல் **பி.வா.சா.ஆ–** 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், 14ம் பிரதிவாதி ஜி.பாலசுப்பிரமணியம் த/பெ. கணபதிகவுண்டர் பி.வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு **பி.வா.சா.ஆ– 7** முதல் **பி.வா.சா.ஆ–** 16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், ஒரு சி.பழனிசாமி த/பெ. கோபால் பி.வா.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டு சா.**சா.ஆ– Y1** குறியீடு செய்யப்பட்டும், 9ம் பிரதிவாதி எஸ். மகேஸ்வரன் த/பெ. சுப்பிரமணியம் பி.வா.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டு **பி.வா.சா.ஆ– 17** முதல் **பி.வா.சா.ஆ– 2**6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட பிறகு, பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

11) கற்றறிந்த 4, 13 முதல் 17 மற்றும் 5, 6 பிரதிவாதிகள் மற்றும் 7 முதல் 10, 12, 22 முதல் 24 பிரதிவாதிகள் தரப்பில் எழுத்து பூர்வமான வாதுரை மற்றும் முன்தீர்ப்புகள் தாக்கல் செய்துள்ளார்கள். கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதுரையில் தாவாச் சொத்து வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட மூததையர் சொத்து என்று வாதுரைத்தார். வாதியின் தகப்பனாருக்கு தாவாச் சொத்து பாகப்பிரிவினை மூலம்

கிடைக்கப்பெற்றாலும், வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் இசைவு மற்றும் கையொப்பம் பெறாமல் சொத்துக்கள் விற்பனை செய்தது செல்லாது. அவ்வாறு வாதியின் தகப்பனார் ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு தாவாச் சொத்துக்களில் உள்ள உரிமை பாதிப்படையாது என்று வாதுரைத்தார்.

12) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞர் தாவாச் சொத்தில் வாதியும், முதல் பிரதிவாதியும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், தாவாச் சொத்தில் வாதிக்கு வாரிசுகிரம படியும் பரம்பரை சொத்தின் அடிப்படையில் பாக உரிமை உண்டு என்பதால் வாதி தாவாவில் கோரியவாறு முதல் நிலை தீர்ப்பாணை சொத்துக்கள் பாகம் பிரித்து உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

13) கற்றறிந்த வாதி தரப்பு வழக்கறிஞரின் வாதம், கற்றறிந்த 13 முதல் 17 , 22 முதல் 24, 7 முதல் 10, 12 மற்றும் 22 முதல் 24 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எழுத்துபுர்வமான வாதுரை மற்றும் எழுத்துபுர்வமான வாதுரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன் தீர்ப்புகள் அனைத்தும் கவனத்தில் கொள்ளப்பட்டது. தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இருதரப்பு ஆவணங்கள், சாட்சியங்கள், வழக்கு கோப்பு ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டது.

**14) <u>எழுவினா எண் :– 1 –க்கான தீர்வு</u> :–**

**<u>எழுவினா 1</u> .** 1. தாவா சொத்துக்கள் மூததையர் சொத்துக்களா?

14.1) வாதியும் முதல் பிரதிவாதியும் சகோதரிகள், இரண்டாம் பிரதிவாதியின் கணவர் முதல் பிரதிவாதி, 3ம் பிரதிவாதி வாதியின் மகன். தாவா சொத்து வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டருக்கு 02.06.1910 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது. 07.09.1960 ம் தேதி வாதியின் தகப்பனாரிடம் யிருந்து 4ம் பிரதிவாதி க.ச.எண். 115, இடுவாய் கிராமத்தில் 1.80 ஏக்கர் சொத்தும், 6ம் பிரதிவாதி க.ச.எண். 115 ல் 3.10 1/4 ஏக்கர் மற்றும் பொது பாதை ஆகியவை கிரையம்

பெற்றுள்ளார் என்பதெல்லாம் இருதரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி. வாதியின் தகப்பனாருக்கு பழனிசாமி என்ற மகன் பிறந்து திருமணம் ஏற்படாமல் 20.03.1971 ம் தேதி இறந்துபோய் உள்ளார். வாதியின் இறந்துபோன தகப்பனாருக்கு பாகப்பிரிவினை மூலம் பிரிந்து வந்த சொத்துக்கள் முததையர் சொத்துக்கள் என்பதால் வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் தாவாச் சொத்தில் சரிபாக பாத்தியம் உள்ளது என்று வாதுரைத்து வாதி அவருக்கு உரிய பாகசொத்தை பிரித்து தர பரிகாரம் கோரியுள்ளார்.

14.2) 20.06.1910 ம் தேதி பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ–1 பாகப்பிரிவினை பத்திரத்தின் படி கந்தப்பகவுண்டர் மக்களுக்கு இடையே சொத்துக்கள் பாகம் ஏற்பட்டு சுப்பைய கவுண்டருக்கு இடுவாய் கிராமம், க.ச.எண். 112 மற்றும் இதர சொத்துக்களில் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது. 07.09.1960 ம் தேதி வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் மற்றும் அவருடைய இளவர் மகன் பழனிசாமிக்காக சுப்பைய கவுண்டர் ஒரு முருகசாமி என்பவருக்கு க.ச.எண். 115 ல் 3.10 1/4 ஏக்கர் சொத்துக்கள் மற்றும் 0.60 செண்ட் நிலத்தில் பொது தடம் மற்றும் 0.15 ஏக்கர் சொத்து மாமூல் நடபாத்தியத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று தெரியவருகிறது. வா.சா.ஆ–6, கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும் போது வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் விற்பனை செய்த சொத்துக்கள் அவருக்கு பாகசாசன பத்திரத்தின் படியும், பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டு சொத்துக்கள் சுவாதீன அனுபவத்தில்யிருந்தாக ஷரத்துக்கள் காணப்படுகிறது. அதே தேதியில் சுப்பைய கவுண்டர் அவருக்காகவும் அவருடைய இளவர் மகன் பழனிசாமிக்காக சேர்ந்து ஒரு பழனிகவுண்டர் என்பவருக்கு இடுவாய் கிராமம், க.ச.எண். 115 ல் 1.80 ஏக்கர் சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ–7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

14.3) வா.சா.ஆ–7 கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கும் பிதுராஜ்ஜிய

வகையில் பாத்தியப்பட்டு சுவாதீனத்தில் இருந்தசொத்துக்களை கிரையம் செய்து கொடுப்பதாக ஷரத்துக்கள் காணப்படுகிறது. வா.சா.ஆ– 1 பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்த பார்க்கும்போது பாகப்பிரிவினை ஆவணம் ஏற்பட்ட தேதியில் வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டர் இளவராக இருந்துள்ளார். பாகப்பிரிவினை ஆவணத்தில் பாட்டையகவுண்டன், பள்ளிகவுண்டன், மாதப்பகவுண்டன், இறந்தபோன குழந்தைகவுண்டன் மகன் 4 வயதுள்ள சுப்பைய கவுண்டன் அவருடைய கார்டியனும் பாட்டனாருமான கந்தப்பகவுண்டர், ராமைய கவுண்டர் ஆகியோர் சொத்துக்களை பாகமாக பிரித்துக்கொண்டுள்ளனர் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ–1, பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் வாதியின் தகப்பனாருக்கு பாகமாக வந்த சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்பட்ட தேதியில் வாதியின் தகப்பனாரான சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்று தான் சட்டப்படி கருத்தில் கொள்ளவேண்டும்.

14.4) அவ்வாறு பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்களை 07.09.1960 ம் தேதி வாதியின் தகப்பனார் அவருக்காவும், அவருடைய இளவர் மகன் பழனிசாமிக்கும் சேர்த்து கிரையம் செய்து கொடுத்த ஆவணங்களில் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட சொத்துக்கள் பாகப்பிரிவினை மற்றும் பிதுராஜ்ஜிய வகையில் பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுயிருந்தாலும் அந்த சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கு பாகம் பிரிவினை மூலம் பிரித்து கொடுக்கப்பட்ட சொத்துக்கள் என்பதால் அந்த சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களாக தான் கருதவேண்டும். அவ்வாறு பாகம் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் இறந்துபோன சுப்பைய கவுண்டரின் மகன் பழனிசாமி பிறந்தவுடன் அவருக்கு அந்த சொத்துக்களில் பாதி பாகம் மூததையர் சொத்தாகவும், மீதி உள்ள பாதி பாகம் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தாகதான் சட்டப்படி சென்றடையும்.

14.5) மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2026–1–Law weekly P.No.874 ல் கீழ்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

**BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT**

Reserved on : 23.10.2025

Pronounced on : 08.01.2026

S.A(MD)No.81 of 2020 and C.M.P(MD) No.1138 of 2020

**P. Vadamalai, J.**

E. Jayachandran ... Appellant / Plaintiff

Vs.

Esakkimuthu Nadar (Died) & others

... Respondents / Defendants

**PRAYER:** This Second Appeal is filed under Section 100 of the Civil Procedure Code, to allow the appeal by setting aside the judgment and decree in A.S.No.130 of 2017 on the file of the Sub Court, Tiruchendur, dated 23.01.2019 by confirming the judgment and decree in O.S.No.90 of 2008 on the file of the District Munsif Court, Sathankulam, dated 12.02.2013.

**Hindu succession act, section 8**

Ancestral or self acquired property – partition – Effect of

held: prior to birth of the plaintiff, there was partition between the 1st defendant (father of plaintiff) and his brother in which the suit properties were allotted to the share of the 1st defendant – First defendant is the absolute owner of the suit properties and he can deal with the suit properties exclusively as per his wish.

14.6) மேலும். வாதி தரப்பு வழக்கு பொருண்மைகள். சாட்சியங்களின் படி வா.சா.ஆ–1 ன் படி பாகப்பிரிவினை மூலம் பெற்ற சொத்துக்கள் வாதியின் தகப்பனார் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்களாகும். அவருடைய மகன் பழனிசாமி பிறந்தஉடன் மூததையர் சொத்துக்கள் என்ற அடிப்படையில் இறந்துபோன வாதியின் சகோதரர் பழனிசாமி பிறப்பு உரிமையின் படி coparcener கோட்பாடின் படி சொத்துக்கள் பாதி பாகம் சென்றடையும். அதே சமயம் இந்து வாரிசு உரிமை சட்டம்,

1956 ன் படி பெண் மகள்களுக்கு மூததையர் சொத்துக்களில் ஆண் மகனை போல் சரிபாக உரிமை உண்டு என்று திருத்தப்பாடுகள் 2005 ம் வருடம் தான் ஏற்பட்டது. அவ்வாறு 2005 ம் வருடம் இந்து வாரிசு உரிமை சட்டம் திருத்தப்பாடுகள் செய்யப்பட்டபோது மூததையர் சொத்துக்கள் பதிவு சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் படி உரிமைமாற்றங்கள் ஏற்பட்டுயிருந்தாலோ அல்லது தகுதிவாய்ந்த உரிமையியல் நீதிமன்றத்தில் இறுதி நிலை தீர்ப்பாணையின் படி பிரிவினை ஏற்படாமல் உள்ள சொத்துக்களில் மட்டும் பெண் மக்களுக்கு coparcener அடிப்படையில் பாக உரிமை ஏற்படும் என்று திருத்தப்பாடுகல் ஏற்பட்டுள்ளது.

14.7) இந்து வாரிசு உரிமை திருத்தப்பாடு சட்டம் 2005 ன் படி சரிபாக உரிமை ஏற்படும். Sec 6 of Hindu Succession Act,

Sec 6; Devolution of interest in coparcenary property.-(1) On and from the commencement of the Hindu Succession (Amendment) Act, 2005, in a Joint Hindu family governed by the Mitakshara law, the daughter of a coparcener shall,-
(a) by birth become a coparcener in her own right in the same manner as the son;
(b) have the same rights in the coparcenary property as she would have had if she had been a son;
(c) be subject to the same liabilities in respect of the said coparcenary property as that of a son, and any reference to a Hindu Mitakshara coparcener shall be deemed include a reference to a daughter of a coparcener:

Provided that nothing contained in this sub-section shall affect or invalidate any disposition or alienation including any partition or testamentary disposition of property which had taken place before the 20th day of December, 2004.

14.8) இதன் அடிப்படையில் கருதில் கொண்டு பார்க்கும்போது வாதியின் தகப்பனார் வா.சா.ஆ–1 மூலம் பாகமாக பிரிந்து வந்த பாக சொத்துக்கள் 1960 ம் வருடம் அவருடைய ஆயுட்காலத்தின் போது இளவர் மகன் பழனிசாமிக்கு சேர்த்து விற்பனை செய்துவிட்டதால் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் தாவாச் சொத்து மூததையர் சொத்துக்களாக 2005 ம் வருடம் அவர்களுடைய தகப்பனார் பெயரில் இல்லை

என்பதாலும், மேலும் வாதியின் தகப்பனாருக்கு பாகப்பிரிவினை மூலம் 1910 ம் வருடம் பிரிந்து வந்த சொத்துக்கள் வாதி மற்றும் முதல் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதாலும் 2005ம் வருடம் வாதி முதல் பிரதிவாதிக்கு மூததையர் சொத்து என்று எந்த ஒரு சொத்துக்களும் அவருடைய தகப்பனார் பெயரில் இல்லை என்று இந்த எழுவினா மூலம் இவ்வாறு விடைகாணப்படுகிறது.

**15) <u>எழுவினா எண் :- 2,3,6-க்கான தீர்வு</u> :-**

**<u>எழுவினா 2</u>.** தாவா சொத்தில் வாதி கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளாரா ?

**<u>எழுவினா</u> 3.** தாவா சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் பெற உரிமை உள்ளதா?

**<u>எழுவினா</u> 6.** வாதி தாவாவில் விளம்புகை பரிகாரம் கோரம்மால் கோரியுள்ள பாகப்பிரிவினை நிலைக்கத்தக்க?

(இந்த மூன்று எழுவினாக்களும் ஒன்றுகொன்று தொடர்புடையவை என்பதால் மூனறு எழுவினாக்களும் ஒரு சேர விவாதத்திற்கு எடுத்துகொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு விடைகாணப்படுகிறது.)

15.1) முன் எழுவினாவில் வா.சா.ஆ-1 ன்படி பாகப்பிரிவினை மூலம் வாதியின் தகப்பனாருக்கு பிரிந்து வந்த சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு 2005 ம் வருடம் இந்து வாரிசு உரிமை திருத்தப்பாடுகள் சட்டத்தின் அடிப்படையில் வாதியின் தகப்பனார் பெயரில் ஏற்பட்ட சொத்துக்கள் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தில் மூலம் விற்பனை செய்யப்பட்டுவிட்டதால் தாவாச் சொத்துக்கள் வாதி மற்றும் முதல் பிரதிவாதிக்கு மூததையர் சொத்துக்கள் இல்லை அவர்களுக்கு தாவாச் சொத்துக்களில் எந்த பாக உரிமையும் இல்லை என்று விடைகாணப்படுகிறது.

15.2) தாவாவில் வாதி அவருடைய தகப்பனார் 07.09.1960 ம் வருடம் ஏற்படுத்திய வா.சா.ஆ-6,7 கிரைய ஆவணங்களை செல்லாது என்று அறிவிக்க கோரி பரிகாரங்கள்

கேட்க தவறியுள்ளார். வாதி வா.சா.ஆ– 1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 20.01.2025 ம் தேதிய குறுக்கு விசாரணையில் அவருடைய வயது 70 என்றும் 19 வயதில் திருமணம் நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். எந்த தேதியில் அவருடைய தகப்பனார் இறந்துபோனார் என்பது தெரியாது என்று ஒப்புக்கொண்டுள்ளார். தாவாச் சொத்தை பொறுத்து 2010 ம் வருடத்திலிருந்து ஆவணங்கள் இல்லை என்பதையும் 1960 ம் வருடம் அவருடைய தகப்பனார் ஏற்படுத்திய ஆவண விவரங்கள் 2011 ம் வருடம் தான் தெரியவந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்பது தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15.3) வாதி 13.10.2025 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்துக்கள் அவருடைய தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதையும் அவருடைய தகப்பனார் 1967 ம் வருடம் இறந்துபோனார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அவருடைய தகப்பனாருக்கு முதல் பிரதிவாதியும், வாதியும் வாரிசுகள் ஒரு பழனிசாமி என்ற மகன் பிறந்து திருமணம் ஏற்படாமல் இறந்துபோய் உள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். 1960 ம் வருடம் வாதியின் தகப்பனார் பூமலூர் கிராமம் க.ச.எண். 89 ல் உள்ள சொத்துக்கள் அவருடைய மகனுக்காகவும் சேர்த்து பழனிசாமிக்கு விற்பனை செய்துவிட்டார் என்பது தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். பழனிசாமியின் வாரிசுகள் அந்த சொத்துக்களை குமரன் & கோ நிறுவனத்திற்கு விற்பனை செய்து, 1989 ம் வருடம் 7 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனார் அந்த சொத்துக்களை கிரையம் பெற்றார் என்பதை மறுக்கவில்லை ஞாபகம் இல்லை என்றுதான் சாட்சியம் அளித்துள்ளார்.

15.4) வாதி தரப்பில் விசாரணைசெய்யப்பட்ட வ.சா.2 வேலுசாமி 03.02.2020 ம் தேதி குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. வாதி தாவாவில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்பது ஞாபகம் இல்லை. தாவாச் சொத்தின் புல எண். விஸ்தீரணம் தெரியாது. சுப்பைய கவுண்டர் உயிருடன் இருந்தபோதே யாருக்கு சொத்துக்களை விற்றார் என்பதும், 07.06.1960 ம்

தேதி ஆவணத்தின் படி தாவாச் சொத்துக்கள் பழனிகவுண்டருக்கு பாத்தியப்பட்டது தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். பழனிகவுண்டர் இறப்பிற்கு பிறகு கணபதி கவுண்டர் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார். அவருக்கு தான் சொத்துக்கள் பாத்தியம் கணபதி கவுண்டர் அவருடைய மகன் பாலசுப்பிரமணியம் பெயரில் உயில் ஏற்படுத்தியுள்ளார் என்பதை மறுக்கவில்லை தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15.5) வா.சா.ஆ–2 13.10.2025 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்து முதலில் யாருக்கு பாத்தியம் என்பது தெரியாது. ராமத்தாளும், லட்சுமியும் சொத்தில் இருந்தார்கள். அவர்கள் யாருக்கு எதிராக சொத்துக்களை விற்பனை செய்தார்கள் என்ற விவரம் தெரியாது. தாவாச் சொத்தில் ராமத்தாளும், லட்சுமியும் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்பதற்கு ஆவணங்களை பார்க்கவில்லை என்று ஒப்புக்கொண்டுள்ளார்.

15.6) 5 ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 15.04.2025 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்துக்கள் 02.06.1910 ம் வருடம் சுப்பைய கவுண்டருக்கு பாகம் மூலம் பாத்தியப்பட்டது என்பதை மறுத்துள்ளார். சுப்பைய கவுண்டர் 15.10.1967 ல் இறந்துபோனார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். முருகசாமி அவர் பெயரிலும் அவருடைய மனைவி பெயரிலும் ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் வாதியும் அவருடைய சகோதரியும் கட்டுப்படுத்தாது என்பதை மறுத்துள்ளார். அந்த ஆவணங்கள் போலியாக ஏற்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15.7) 14 ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ– 2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் 15.07.2025 ம் தேதிய குறுக்கு விசாரணையில் அ.வ.எண். 411/2019 க.ச.எண்.115/9, 10 பூமியில் 1.80 ஏக்கர் சொத்துக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார். கிரையம் பெற்ற சொத்துக்களை விட அதிக சொத்துக்கள் வருவாய் ஆவணங்களில் அதிகமாக உள்ளதால் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் மீதம் உள்ள சொத்துக்களில் உரிமை உள்ளது என்பதை மறுத்துள்ளார். தாவாச் சொத்தில் வாதிக்கு

பங்கு இருப்பதால்தான் அவருடைய மகன் பெயரில் தானசெட்டில் மெண்ட் ஏற்படுத்தப்பட்டது என்பதை மறுத்துள்ளார். 14 ம் பிரதிவாதியின் தகப்பனார் ஏற்படுத்திய உயில் ஆவணமும் செல்லாது என்பதை மறுத்துள்ளார்.

15.8) ஒரு பழனிசாமி என்பவர் பி.வா.சா.ஆ– 3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர் 28.07.2025 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்திற்கு பட்டாப்படி உள்ள மொத்த விஸ்தீரணம் தெரியாது. தாவாச் சொத்துக்கள் சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. 1960 ம் வருட ஆவணத்தில் வாதியும் முதல் பிரதிவாதியும் கையொப்பம் செய்யவில்லை என்பதை மறுக்கவில்லை தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். 9 ம் பிரதிவாதி பி.வா.சா.ஆ–4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். 12.01.2026 ம் தேதிய குறுக்கு விசாரணையில் தாவாச் சொத்து பாகப்பிரிவினை மற்றும் பிதுராஜ்ஜிய படி ராமத்தாள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். பழனிகவுண்டர் ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது செல்லாது என்பதை மறுத்துள்ளார். பழனிகவுண்டரின் வாரிசுதாரர்கள் குமரன் ஆன் கோ பங்குதாரர்களுக்கு ஏற்படுத்திய கிரைய ஆவணம் பழனிசாமி பெயரில் ஏற்பட்ட விடுதலை ஆவணம் ஆகியவை செல்லாது வாதியை கட்டுப்படுத்தாது என்பதை மறுத்துள்ளார்.

15.9) வா.சா.ஆ–1 பாகப்பிரிவினை படி 1910 ம் வருடம் வாதியின் தகப்பனாருக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் ஏற்பட்ட பிறகு சுப்பைய கவுண்டர் இறக்கும்வரை தாவாச் சொத்தில் உள்ள உரிமை பொறுத்து வாதியும், முதல் பிரதிவாதியும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. வாதி தரப்பு சாட்சியத்தின் படி வாதியின் தகப்பனார் 1967 ம் வருடம் இறந்துபோன பிறகு வாதியும் முதல் பிரதிவாதியும் வாரிசு சான்றிதழ் பெறுவதற்காக சட்டநடவடிக்கைகளை 2009 ம் வருடம் மேற்கொண்ட பிறகு சுப்பைய கவுண்டருக்கு பாகம் மூலம் வந்த சொத்துக்கள் 1960 ம் ஆண்டு விற்பனை ஏற்பட்ட பிறகு சுப்பைய கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் அவர் இறக்கும்போது இல்லாத சூழ்நிலையில் வாரிசுகிரம படி வாதிக்கும் முதல்

பிரதிவாதிக்கும் சுப்பைய கவுண்டர் விற்பனை செய்த சொத்துக்களில் எந்த உரிமையும் பாகமும் ஏற்படாது.

15.10) மேலும் 2005 ம் வருடம் இந்து வாரிசு உரிமை சட்ட திருத்தப்பாடுகள் படி திருத்தப்பாடு ஏற்பட்ட அமலுக்கு வந்த தேதியில் வா.சா.ஆ–1 ன் படி வாதியின் தகப்பனாருக்கு பிரிந்து வந்த சொத்துக்கள் அன்றைய தேதியில் வாதியின் தகப்பனார் பெயரில் இல்லை. வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோதே 1960 ம் வருடம் பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்களை அவர் விற்பனை செய்து விட்ட காரணத்தினால் அவ்வாறு விற்பனை செய்யப்பட்ட சொத்தில் வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் தாவாச் சொத்துக்களில் உரிமையோ பாத்தியமோ ஏற்படாது என்று மேலே விவாதித்தன் அடிப்படையிலும் முதல் எழுவினாவில் விடை கண்டதின் அடிப்படையில் நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

15.11) ஆகையால், தாவாச் சொத்துக்களில் வாதிக்கோ முதல் பிரதிவாதிக்கோ எந்த ஒரு உரிமையோ பாத்தியமோ இல்லை என்பதால் வாதி தாவாவில் கோரியவாறு தாவாச் சொத்துக்களை 1/3 பாகம் பெற அருகதை இல்லை என்று இந்த எழுவினா மூலம் இவ்வாறு விடைகாணப்படுகிறது. மேலும் வாதி வா.சா.ஆ–1 ன் அடிப்படையில் அவருடைய தகப்பனார் ஏற்படுத்திய வா.சா.ஆ–6, 7 கிரைய ஆவணங்கள் மற்றும் அதன் அடிப்படையில் ஏற்பட்ட மற்ற பதிவு ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் அனைத்தும் செல்லாது என்று பரிகாரங்கள் கோர தவறியதும் தாவாவில் வாதிக்கு மிகபெரிய பின்னடைவாக அமைகிறது என்று முடிவுசெய்தும் அதன் அடிப்படையில் தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

15.12) வாதி, 2009 ம் வருடம் இறந்துபோன அவருடைய தகப்பனார் சுப்பைய கவுண்டருக்கும், அவருடைய சகோதரர் பழனிசாமி இறந்தபிறகு வாதியும் முதல் பிரதிவாதியும் வாரிசுதாரர்கள் என்று வா.சா.ஆ– 9 ன் படி தீர்ப்பாணை பெற்ற பிறகு தான் வருவாய் ஆவணமான பட்டா அவர்கள் பெயரில் ஏற்பட்டுள்ளது. வாதியின் தகப்பனார் 1967 ம் வருடம் இறந்தபிறகு கிட்டதட்ட 2009 ம் வருடம் வரை தாவாச் சொத்தில்

வாதியும் முதல் பிரதிவாதியும் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பதற்கு வாதி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. மேலும், வாதியின் தகப்பனார் வா.சா.ஆ– 6,7 ன்படி 1960 ம் வருடமே பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை விற்பனை செய்து கிரையதாரர்களிடம் சுவாதீனம் ஒப்படைத்துவிட்டதால் வாதி தாவாச் சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று இந்த எழுவினாவின் மூலம் இவ்வாறு விடை காணப்படுகிறது.

**16) எழுவினா 4 க்கான தீர்வு :–**

**எழுவினா 4.** தாவா காலவரை தோஷத்தால் பாதிப்படைகிறதா?

16.1) முன் எழுவினாக்களில் தாவாச் சொத்துக்கள் வா.சா.ஆ– 1 ன் படி வாதியின் தகப்பனாருக்கு பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்ட பிறகு அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்று விடைகாணப்பட்டும், வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோதே பாகப்பிரிவினை மூலம் கிடைக்பெற்ற சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்று விடைகாணப்பட்டும், தாவாச் சொத்துக்கள் 2005 ம் வருட இந்து வாரிசு உரிமை சட்டம் 1956, திருத்தப்பாடுகள் படி அன்றை தேதியில் வாதியின் தகப்பனார் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்பதால் தாவாச் சொத்தில் வாதிக்கும், முதல் பிரதிவாதிக்கும் எந்த ஒரு உரிமையோ பாத்தியமோ இல்லை என்று விடைகாணப்பட்டுள்ளது. ஆகையால், முன் எழுவினாக்களில் விவாதித்தன் படி தாவாச் சொத்துக்களில் எந்த ஒரு உரிமையும் பாத்தியமும் இல்லாமல் வாரிசுகிரம படி தாவாச் சொத்துக்கள் மூததையர் சொத்துக்கள் என்று வாதி தாவாவில் பாகம் கோரியுள்ளதே சட்டப்படி தவறு என்று முடிவு செய்து தாவாச் சொத்தில் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்பதால் காலவரையை பற்றி கேள்வி எழவில்லை என்று முடிவு செய்து தாவா பரிகாரங்கள் காலவரை தோஷத்தால் பாதிப்படைகிறதா என்பதை பொறுத்து விடைகாணவேண்டிய அவசியம் இல்லை என்று இந்த எழுவினா இவ்வாறு விடைகாணப்படுகிறது.

**<u>17) எழுவினா 7 க்கான தீர்வு :–</u>**

<u>எழுவினா 7</u> தாவா அவசிய தரப்பினர்களை சேர்க்கதா தோஷத்தால் பாதிப்படைகிறதா?

17.1) முன்எழுவினாக்களில் பாகப்பிரிவினை படி வாதியின் தகப்பனாருக்கு பிரிந்து வந்த சொத்துக்களை வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோதே விற்பனை செய்துவிட்டார் என்று விடைகாணப்பட்டுள்ளது. தாவாச் சொத்தை பொறுத்து தாவாவில் வாதி முதல் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து யிருந்தாலும் வா.சா.ஆ– 6, 7 ஆவணங்கள் படி வாதியின் தகப்பனார் சொத்துக்கள் விற்பனை செய்த பிறகு பல உரிமை மாற்றங்கள் பதிவு ஏற்பட்ட ஆவணங்கள் மூலம் ஏற்பட்டுயிருக்கும்போது அவ்வாறு ஏற்பட்ட ஆவணங்களின் தரப்பினர்கள் அனைவரையும் வாதி தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று முடிவு செய்து தாவா அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைவதாக இந்த எழுவினா வாதிக்கு எதிராக விடைகாணப்படுகிறது.

**<u>18) எழுவினா 5 க்கான தீர்வு :–</u>**

<u>எழுவினா 5</u> வாதி தாவாவில் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் சரியா ?

18.1) வாதி தாவா தாக்கல் செய்யும்போது பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக தாவாச் சொத்துக்களை மதிப்பீடு செய்து கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளதாக வாதுரைத்து தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 37(2) ன் படி நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியுள்ளார். முன் எழுவினாக்களில் தாவாச் சொத்துக்களில் வாதிக்கும் முதல் பிரதிவாதிக்கும் எந்த ஒரு உரிமையோ பாத்தியமோ இல்லை என்று விடைகாண்ப்பட்டுயிருந்தாலும், வாதி தாவாவை தாக்கல் செய்தபோது தாவாச் சொத்தில் கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளார் என்பதற்காக பட்டா எண். 65, 537, 261 மற்றும் வட்டாச்சியர் ஏற்படுத்திய உத்தரவுகள், 21.09.2010 ம் தேதிய கந்தாய ரசீது ஆகியவற்றை தாக்கல் செய்துள்ளார். வருவாய் துறையினர் எதன் அடிப்படையில் தாவா சொத்திற்கு பட்டாவை வாதி பெயரிலும் முதல் பிரதிவாதியின் பெயரிலும் எதன் அடிப்படையில்

மாற்றம் செய்தார்கள் என்பதையும், அந்த உத்தரவுகள் செல்லாது என்பதை எல்லாம் பிரதிவாதிகள் வருவாய் துறை மேல் அதிகாரியிடம் மேல்முறையீடு மூலம்தான் பரிகாரம் தேடவேண்டும். ஆகையால் வாதி தாவா தாக்கல் செய்த சமயத்தில் தாவா சொத்தில் வருவாய் ஆவணங்கள் படி கூட்டு சுவாதீனத்தில் உள்ளார் என்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா பரிகாரங்களுக்காக வாதி தாவாவை சரியாக மதிப்பீடு செய்து சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்று இந்த எழுவினா இவ்வாறு விடைகாணப்படுகிறது.

**<u>19) எழுவினா 8 க்கான தீர்வு :–</u>**

**<u>எழுவினா</u>** <u>8</u> வாதிக்கு வேறு எண்ண பரிகாரங்கள் வழங்க வேண்டும்?

19.1) முன்எழுவினாக்களில் தாவாச் சொத்துககள் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள், வாதியின் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே பாகப்பிரிவினை மூலம் பெற்ற சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டதால், வாதிக்கு தாவாச் சொத்தில் பாக உரிமை இல்லை என்று விடைகாணப்பட்டுள்ளதால், வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் வழங்கவேண்டியதில்லை என்று இந்த எழுவினா இவ்வாறு விடைகாணப்படுகிறது.

முடிவாக, தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், **இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம்** நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2026.03.26 18:35:35 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**1. வாதி தரப்பு சாட்சிகள்:–**

| | |
|---|---|
| வா.சா.1 | திரு. ராமாத்தாள், க/பெ.திரு. சின்னமுருகசாமி |
| வா.சா.2 | திரு. வேலுசாமி த/பெ. |

**2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ 1 | 20.7.1910 – சுப்பைய கவுண்டர் வகையறா இடையே ஏற்பட்ட பாகபிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 2 | 17.5.2010 – திருப்பூர் இடுவாய் கிராமம். ச.வே.எண். 115/9 பட்டா எண். 65 க்குரிய சிட்டா | இணைய நகல் |
| வா.சா.ஆ 3 | 17.5.2010 – திருப்பூர் இடுவாய் கிராமம். ச.வே.எண். 615/10 பட்டா எண். 537 க்குரிய சிட்டா | இணைய நகல் |
| வா.சா.ஆ 4 | 18.9.1989 – சுப்பிரமணியம் பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 5 | 14.5.2010 – திருப்பூர் வட்டாச்சியர் ஏற்படுத்திய உத்தரவுகள் | அசல் |
| வா.சா.ஆ 6 | 7.9.1960 – முருகசாமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 7 | 7.9.1960 – பழனி கவுண்டர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ 8 | 29.7.2002 – 5ம் பிரதிவாதி ராமசாமி பெயரில் உள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | 30.10.2009 – திருப்பூர் மாவட்ட உரிமையில் நீதிமன்றம் அ.வ.எண். 65/2009 ல் ஏற்பட்ட | சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| | தீர்ப்புரை | |
| வா.சா.ஆ.10 | 13.3.2010 – சுப்பையகவுண்டர் வாரிசு சான்றிதழ் | உண்மை நகல் |

.

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| பி.வா.சா.1 | திரு. ராமசாமி, த/பெ. சுப்புகுட்டி |
| பி.வா.சா.2 | திரு. பாலசுப்பிரமணியம், த/பெ. கணபதி கவுண்டர் |
| பி.வா.சா.3 | திரு. பழனிசாமி, த/பெ. கோபால் |
| பி.வா.சா.4 | திரு. மகேஸ்வரன், த/பெ. சுப்பிரமணியம் |

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| **பி.வா.சா.ஆ 1** | 29.7.2002 – 6 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் (அசல் ஆவணம் உள்ளதாக சாட்சி கூறுகிறார்) | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 2** | 29.7.2002 – 5 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய ஆவணம் (அசல் ஆவணம் உள்ளதாக சாட்சி கூறுகிறார்) | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 3** | 2.4.1994 – திருப்பூர் இடுவாய் கிராமம் பட்டா எண். 323, பசலி 1403, 1415 க்குரிய கந்தாய ரசீது – 2 ரசீதுகள். | அசல் |
| **பி.வா.சா.ஆ 4** | 1.4.2025 – திருப்பூர் தெற்கு இடுவாய் கிராமம் பட்டா எண். 323, பட்டா எண். 2774 க்குரிய சிட்டா | கணினி நகல் |
| **பி.வா.சா.ஆ 5** | திருப்பூர் தெற்கு இடுவாய் கிராமம் க.ச.எண்.114/1, 115/2 க்குரிய 'அ' பதிவேடு | கணினி நகல் |

| | | |
|---|---|---|
| **பி.வா.சா.ஆ 6** | 4.12.2024 – 1.1.1987 முதல் 3.12.2024 வ ரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் | அசல் |
| **பி.வா.சா.ஆ 7** | பசலி 1395,1399,1400,1401,1402,1403, 13.08.1998 ம் தேதிய பசலி 1415, 1417, 1419 ம் தேதியிட்ட கந்தாய ரசீதுகள் | அசல் |
| **பி.வா.சா.ஆ 8** | 18.1.2017– கணபதி கவுண்டர் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 9** | 18.1.2017– கணபதி கவுண்டர் வாரிசு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 10** | 12.10.2010 – 1.1.1959 முதல் 31.7.1973 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ்,17.2.2013 – 1.7.1973 முதல் 31.12.1986 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் – 2 எண்ணிக்கை | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 11** | 17.4.2024 – மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் நீதி பேராணை எண். 3257/2011 ஏற்படுத்திய உத்தரவுகள் | Web copy |
| **பி.வா.சா.ஆ 12** | சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது | ஒளி நகல் |
| **பி.வா.சா.ஆ 13** | **7.9.1960** – பழனிகவுண்டர் பெயரில் உள்ள கிரைய பத்திரம் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 14** | 19.5.2010 – சுப்பையன் பெயரில் உள்ள தானசெட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 15** | 19.5.2010 – பொன்னுசாமி பெயரில் உள்ள தானசெட்டில் மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 16** | **5.10.2011** – திருப்பூர் மங்கலம் காவல் நிலையம் குற்ற எண். 1887/2011 முதல் தகவல் அறிக்கை மட்டும் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 17** | 15.09.1960 – பழனிகவுண்டர் பெயரில் உள்ள | சான்றிட்ட |

| | | |
|---|---|---|
| | கிரைய ஆவணம் | நகல் |
| **பி.வா.சா.ஆ 18** | 4.2.1980 – குமரன் அன் கோ பங்குதாரர் பெயரில் கிரைய ஆவணத்தின் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 19** | 4.2.1980 – குமரன் அன் கோ பங்குதாரர் பெயரில் கிரைய ஆவணத்தின் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 20** | 7.3.1983 – குமரன் அன் கோ நிறுவனம் ராமசாமி, பழனிசாமி பெயரில் ஏற்படுத்திய விடுதலை ஆவணம் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 21** | 28.08.1984 – குமரன் அன் கோ நிறுவனம் ராமசாமி, பழனிசாமி பெயரில் ஏற்படுத்திய விடுதலை ஆவணம் | சான்றிட்ட நகல் |
| **பி.வா.சா.ஆ 22** | 24.9.2025 – 1.1.1960 முதல் 31.12.1961 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் | அசல் |
| **பி.வா.சா.ஆ 23** | 24.9.2025 – 1.1.1967 முதல் 31.12.1974 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் | அசல் |
| **பி.வா.சா.ஆ 24** | 30.9.2025 – 1.1.1975 முதல் 29.09.2025 வரை உள்ள வில்லங்கச் சான்றிதழ் | அசல் |
| **பி.வா.சா.ஆ 25** | 22.09.2025 – திருப்பூர், பல்லடம் தாலூக்கா, பூமலூர் கிராமம், சர்வே எண். 89/2 க்குரிய புலபடம் | இணைய வழி நகல் |
| **பி.வா.சா.ஆ 26** | 22.09.2025 – திருப்பூர், பல்லடம் தாலூக்கா, பூமலூர் கிராமம், சர்வே எண். 89/2 க்குரிய பட்டா எண். 261 உரிய சிட்டா | இணைய வழி நகல் |

**5. பிரதிவாதி சாட்சி தரப்பு சான்றாவணங்கள்** :–

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ– ய1 | சாட்சியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது – ஒளி நகல் | |

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2026.03.26 18:35:49 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

**********************

Fair / Draft Judgment
in

O.S.No. 305/2011

ASJ Court – Tiruppur.

Dated : 26.03.2026